குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றம், நாமக்கல்

முன்னிலை - திருமதி. P.K .தமயந்தி, M.A., B.L.,

நீதித்துறை நடுவர் எண்.2, நாமக்கல்

2017 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 - ம் நாள் திங்கள்கிழமை

திருவள்ளுவராண்டு 2048 ஸ்ரீஹேவிளம்பி வருடம் புரட்டாசி திங்கள் 02 - ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். **01/2017**</u>

அரசுக்காக உதவி ஆய்வாளர்,
புதுச்சத்திரம் காவல் நிலையம்,
நிலையக் குற்ற எண். 135/2016 ........ குற்ற முறையிடுபவர்/வாதி

/எதிராக/

1. ரங்கசாமி (59),
   த.பெ. சின்னுசாமி,
   நாயக்கர் தெரு, பாலப்பட்டி,
   திருமலைப்பட்டி,
   சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல்.

2. ராஜேந்திரன் (34),
   த.பெ. ரங்கசாமி,
   நாயக்கர் தெரு, பாலப்பட்டி,
   திருமலைப்பட்டி,
   சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல்.

3. ராணி (50),
   க.பெ. ரங்கசாமி,
   நாயக்கர் தெரு, பாலப்பட்டி,
   திருமலைப்பட்டி,
   சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல்..

4. மேனகா (29),
   க.பெ. மூர்த்தி,
   நாயக்கர் தெரு, பாலப்பட்டி,
   திருமலைப்பட்டி,
   சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல்.

5. மூர்த்தி (36),
   த.பெ. வருதராஜ்,
   நாயக்கர் தெரு, பாலப்பட்டி,
   திருமலைப்பட்டி,
   சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல்.

6. சின்னம்மாள் (56),
   க.பெ. வருதராஜ்,
   நாயக்கர் தெரு, பாலப்பட்டி,
   திருமலைப்பட்டி,
   சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல்.

WEB COPY

....... குற்றம்சாட்டப்பட்டவர்கள் /1 முதல் 6 எதிரிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியாக 16.09.2017 ம் தேதி விசாரணைக்கு வந்த போது குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசுக் குற்றத்துறை உதவி வழக்கறிஞர் Tmt.A.Subhashri, B.A.,B.L., Grade II

APP., அவர்களும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் Thiru.M.Ramesh,B.A.,B.L., அவர்கள் முன்னிலையில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

தீர்ப்புரை

06.06.2016 ம் தேதி இரவு 21.30 மணிக்கு புதுச்சத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருமலைப்பட்டி, பாலப்பட்டி மாரியம்மன் கோவில் முன்பு சாட்சி 1 செல்வராஜுக்கும், எதிரிகளுக்கும் கோவில் கட்டுவதில் வரி வசூல் செய்வதில் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமான முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு என்னங்கடா கோவிலை கட்டி கிழிச்சீங்க, இரண்டு நாட்களுக்கு முன்பு எனது மருமகன் சின்ராசுவிடம் தகராறு செய்துள்ளீர்கள் இதற்கு பதில் சொல்லிவிட்டு கூட்டத்தை நடத்துங்கடா என்று எதிரிகள் கலகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்று கூடிய செய்கையானது சட்டப்பிரிவு 147 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார்கள் என்றும்,

சம்பவத்தின் தொடர்ச்சியாக, மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A1 எதிரி ரங்கசாமி என்பவர் கீழே கிடந்த செங்கலை எடுத்து தேவடியா மவனே என சொல்லிக் கொண்டே சாட்சி 1 செல்வராஜுன் வாயில் அடித்ததால் செல்வராஜுக்கு கீழ் தாடையில் உள்ள ஒரு பல் உடைந்தும், மேல் தாடையில் உள்ள ஒரு பல் பாதியாக உடைந்தும் மேல் உதடு கிழிந்து கொடுங்காயத்தை ஏற்படுத்திய செய்கையானது சட்டப்பிரிவு 294(b),324 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார் என்றும்,

WEB COPY

சம்பவத்தின் தொடர்ச்சியாக மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A2 எதிரி ராஜேந்திரன் என்பவர் கையால் சாட்சி 1ன் தலையில் அடித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்த செய்கையானது சட்டப்பிரிவு 323,506(i) இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார் என்றும்,

சம்பவத்தின் தொடர்ச்சியாக மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A3 எதிரி ராணி என்பவர் கீழே கிடந்த செங்கலை எடுத்து சாட்சி 1 ன் முதுகில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்திய செய்கையானது சட்டப்பிரிவு 324 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார் என்றும்,

சம்பத்தின் தொடர்ச்சியாக மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A4 எதிரி மேனகா A5 எதிரி மூர்த்தி மற்றும் A6 எதிரி சின்னம்மாள் என்பவர்கள் சாட்சி 1 செல்வராஜை கீழே கிடந்த தடியை எடுத்து முதுகிலும், இடது காலிலும் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்திய செய்கையானது சட்டப்பிரிவு 324 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார்கள் என்றும், எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவு 147,294(b),323,324,506(i) இதசவின் படி அரசு தரப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசுத்தரப்பில் சார்ந்துள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. 207 வது பிரிவின் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். இரு தரப்புக்கும் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டு, எதிரிகள் குற்றம் புரிந்ததாக அனுமானிக்க போதிய ஆதாரங்கள் ஆவணங்கள் உள்ளதாக கருதப்பட்டு, எதிரிள்க மீது இதச பிரிவுகள் 147,294(b),323,324,506(i) ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரிகளிடம்

குற்றங்களைப் பற்றி கு.வி.மு.ச.240 ன் படி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார்கள். வழக்கு விசாரணை வேண்டினார்கள்.

4. எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளதால் இவ்வழக்கின் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சாட்சிகளின் பட்டியலில் அ.த.சா.1,2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், சாட்சிப்பட்டியலில் 2 முதல் 9 சாட்சிகள் அரசு தரப்பில் Dispensed செய்து மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.1 முதல் 5 வரையுள்ள சான்றாவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளன.

5. <u>அரசுத் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கானது பின் வருமாறு.</u>

(5.1) அ.த.சா.1 செல்வராஜ் தனது முதல் விசாரணையில் தான் பாலப்பட்டியில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன் என்றும், வழக்கு சம்பமந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், புகாரில் உள்ளது தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும், தற்போது எதிரிகளும் தானும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றும், சமாதான மனுவில் உள்ளது தன்னுடைய கையொப்பம் தான் என்றும், சமாதான மனு அ.த.சா.ஆ.1 ஆகும் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.த.சா.2 மணிகண்டன் தனது முதல் விசாரணையில் தான் தற்போது புதுச்சத்திரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், 08.06.2016 ம் தேதி ராஜேந்திரன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நிலைய பொருப்பில் இருந்த போது நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற இன்டிமேசனை பெற்று சிகிச்சையில் இருந்த செல்வராஜ் என்பவரிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்ற நிலையம் வந்து நிலைய குற்ற எண். 135/16 சட்டப்பிரிவு 147,148,294 (b),323,324, 506 (i) இதசவாக வழக்கு பதிவு செய்தர்ர் என்றும், புகார் அ.த.சா. ஆ. 2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா. ஆ 3 என்றும், பின்னர் வழக்கு கோப்பினை தனது பார்வைக்கு வைத்தார் என்றும், வழக்கை தனது விசாரணைக்கு எடுத்து கொண்டு தான் சம்பவயிடம் சென்று சாட்சிகள் வேலுசாமி மற்றும் சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், பின்னர் சாட்சிகள் செல்வராஜ், துரைசாமி, சரவணன், சதாசிவம், சதாமணி, வேலுசாமி, சுந்தர்ராஜன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், எதிரிகள் முன் ஜாமீன் பெற்று விட்டதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. ராஜேஷ் என்பரை விசாரித்து காய சான்ற பெற்றேன் என்றும், காய சான்று அ.த.சா. ஆ 4 ஆகும் என்றும், வழக்கின் சட்டப்பிரிவை 148 ஐ நீக்கம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா. ஆ 5 ஆகும் என்றும், பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 147,294(b),323,324,506(i) இதசவின் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் அரசுத் தரப்பு சாட்சியங்களை கேள்விகளாகத் தொகுத்து கு.வி.மு.ச.313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி அவற்றை மறுத்து பொய்சாட்சி, பொய் வழக்கு என்றும் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சியம் இல்லை என்று கூறப்பட்டு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

9. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:</u>- இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம்

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளார்களா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

10. அரசுத் தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட சட்டப்பிரிவுகள் இதச 147,294(b),323,324,506(i) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கவும், அ.த.சா.1,2 சாட்சிகளும் மற்றும் அ.த.சா.ஆ.1 முதல் 5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

11. இவ்வழக்கில் எதிரி தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு சம்பவத்தில் வாதியும், எதிரிகளும் சமாதானமாகி விட்டதால் அரசு தரப்பில் உரிய சாட்சிகளின் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்பதாலும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும்,வாதிட்டார்.

12. இருதரப்பு கருத்துக்களும், ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன.

13. 06.06.2016 ம் தேதி இரவு 21.30 மணிக்கு புதுச்சத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருமலைப்பட்டி, பாலப்பட்டி மாரியம்மன் கோவில் முன்பு சாட்சி 1 செல்வராஜுக்கும், எதிரிகளுக்கும் கோவில் கட்டுவதில் வரி வசூல் செய்வதில் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமான முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு என்னங்கடா கோவிலை கட்டி கிழிச்சீங்க, இரண்டு நாட்களுக்கு முன்பு எனது மருமகன் சின்ராசுவிடம் தகராறு செய்துள்ளீர்கள் இதற்கு பதில் சொல்லிவிட்டு கூட்டத்தை நடத்துங்கடா என்று எதிரிகள் கலகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்று கூடிய செய்கையானது சட்டப்பிரிவு 147 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார்கள் என்றும்,

WEB COPY

சம்பவத்தின் தொடர்ச்சியாக, மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A1 எதிரி ரங்கசாமி என்பவர் கீழே கிடந்த செங்கலை எடுத்து தேவடியா மவனே என சொல்லிக் கொண்டே சாட்சி 1 செல்வராஜுன் வாயில் அடித்ததால் செல்வராஜுக்கு கீழ் தாடையில் உள்ள ஒரு பல் உடைந்தும், மேல் தாடையில் உள்ள ஒரு பல் பாதியாக உடைந்தும் மேல் உதடு கிழிந்து கொடுங்காயத்தை ஏற்படுத்திய செய்கையானது சட்டப்பிரிவு 294(b),324 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார் என்றும்,

சம்பவத்தின் தொடர்ச்சியாக மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A2 எதிரி ராஜேந்திரன் என்பவர் கையால் சாட்சி 1ன் தலையில் அடித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்த செய்கையானது சட்டப்பிரிவு 323,506(i) இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார் என்றும்,

சம்பவத்தின் தொடர்ச்சியாக மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A3 எதிரி ராணி என்பவர் கீழே கிடந்த செங்கலை எடுத்து சாட்சி 1 ன் முதுகில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்திய செய்கையானது சட்டப்பிரிவு 324 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார் என்றும்,

சம்பத்தின் தொடர்ச்சியாக மேற்படி தேதி, மேற்படி மணி, மேற்படி சம்பவத்தின் போது A4 எதிரி மேனகா A5 எதிரி மூர்த்தி மற்றும் A6 எதிரி சின்னம்மாள் என்பவர்கள் சாட்சி 1 செல்வராஜை கீழே கிடந்த தடியை எடுத்து முதுகிலும், இடது காலிலும் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்திய செய்கையானது சட்டப்பிரிவு 324 இதசவின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார்கள் என்றும், எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவு 147,294(b),323,324,506(i) இதசவின் படி அரசு தரப்பு வழக்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. இவ்வழக்கில் அ.த.சா.1 வாதி செல்வராஜ் முதல் விசாரணையில் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும், சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகளின் மீதான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்களை பொறுத்து சாட்சியம் அளிக்கவில்லை. எதிரிகள் தரப்பில் சமாதான மனு கு.வி.மு.ச. பிரிவு 320ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு CMP.No. 4646/2017 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கண்ட குற்றச்சாட்டுக்கள் சமரசம் செய்து கொள்ளத்தக்கதல்ல என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அ.த.சா.1 அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் எதிரிகளும், வாதியும் சமாதானமாகிவிட்டதால் சாட்சியப்பட்டியலில் 2 முதல் 9 வரையான சாட்சிகள் அரசு தரப்பில் Dispensed செய்யப்பட்டுள்ளது.

14. புலன் விசாரணை அதிகாரி அ.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் புலன் விசாரணை செய்ததை பற்றியும், இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் சொல்லியுள்ளார். எதிரி தரப்பில் அ.த.சா.1 புகார் கொடுக்கவில்லை என்று விசாரிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.த.சா.1 அரசு தரப்பு குற்றச்சாட்டுக்களை பொறுத்து சாட்சியம் அளிக்காததால் எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

WEB COPY

15. ஆகவே, சாட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக சொல்லும் காயம் இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகளினால் ஏற்பட்டதா என்பது சந்தேகத்திற்கு இடமளிப்பதாக உள்ளது. ஆகவே, சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கத்தக்கதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147,148,323,324,506(i) ன் படியான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் இந்நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை. ஆகவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு நிரூபிக்கப்படவில்லை. ஆகவே எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147,148,323,324,506(i) ன் படியான குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து எதிரிகளை 248(1) கு.வி.மு.ச படி விடுதலை செய்கிறது.

17. முடிவாக எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147,148,323,324,506(i) ன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. எதிரிகள் பிணைப்பத்திரம் ஏதும் கொடுத்திருந்தால், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அதை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

19. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் ஆஜர்படுத்தாததால் சொத்துக்கள் பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

20. இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 -ம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- பி.கே.தமயந்தி,
நீதித்துறை நடுவர் எண்.2, நாமக்கல்.

1. <u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>:

| | | |
|---|---|---|
| அ.சா.1 | செல்வராஜ் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. மணிகண்டன் | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |

2. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12-09-2017 | சமாதான மனு |
| அ.சா.ஆ.2 | 12-09-2017 | புகார் |
| அ.சா.ஆ.3 | 12-09-2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 12-09-2017 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.5 | 12-09-2017 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

3. <u>அரசுத் தரப்பு சான்றுப் பொருள் இல்லை:</u>

4. <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை.</u>

ஒம்/- பி.கே.தமயந்தி,
நீதித்துறை நடுவர் எண்.2, நாமக்கல்.

WEB COPY

<u>குறிப்பு:</u>
1. தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு காவலர் மூலம் தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.
3. இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.2, நாமக்கல்.